# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, அப்பி வெனுவென் அப்பி நிதியச் சட்டம்

---

(2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2008, பெப்புருவரி மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

விலை : ரூபா 14.00 தபாற் செலவு : ரூபா 7.50

# 2008 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, அப்பி வெனுவென் அப்பி நிதியச் சட்டம்

[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ 28/2007

**ஆயுதந்தாங்கிய படைச்சேவை ஆளணியினருக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கு அல்லது வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கென கடன்களை வழங்குவதற்கு "அப்பி வெனுவென் அப்பி நிதியம்" என அழைக்கப்பட வேண்டியதும் அறியப்பட வேண்டியதுமான நிதியமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

1. இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க "அப்பி வெனுவென் அப்பி நிதியம்" என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. (1) (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), "அப்பி வெனுவென் அப்பி நிதியம்" எனவழைக்கப்பட வேண்டியதும் அறியப்படவேண்டியதுமான நிதியமொன்று, 4ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறான நிதியத்தின் இலட்சியங்களுக்கும் குறிக்கோள்களுக்கும் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும். *"அப்பி வெனுவென் அப்பி நிதியம்" என்பதனைத் தாபித்தல்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியம், "அப்பி வெனுவென் அப்பி நிதியம்" என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அப்பெயரைக் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது, விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. (1) நிதியத்தின் நிருவாகமும், முகாமையும், கட்டுப்பாடும் (இதனத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். *நிதியத்தின் முகாமைச் சபை.*

(2) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

2-PL 002608-1,200 (2007/11)

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் –

(i) பாதுகாப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ii) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மத்திய வங்கியின் பிரதி ஆளுநரொருவர் ;

(iii) 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் பேரவையின் தலைவர் அல்லது உறுப்பினரொருவர் ;

(iv) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் முகாமை நிறுவகத்தின் முகாமைச் சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பட்டப்பின் முகாமை நிறுவகத்தினது துறையின் பணிப்பாளர் அல்லது உறுப்பினரொருவர் ; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்), சட்டத்திலும் நிதியிலும் அவசியமான தகைமைகள், அனுபவம் அல்லது நிபுணத்துவம் உடையோர்களிடையேயிருந்து, பாதுகாப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டிய இரு உறுப்பினர்கள்.

(3) பாதுகாப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், சபையின் தவிசாளராக விருத்தல் வேண்டும்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சபையின் தவிசாளருக்கான பிரதியொன்றுடன், நியமிக்கின்ற அதிகாரிக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்திலான கடிதத்தொடர்புமூலம் தமது பதிவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம்.

(5) ஆளொருவர் –

(அ) பாராளுமன்றத்தின் அல்லது மாகாணசபையொன்றின் அல்லது உள்ளூரதிகாரசபையொன்றின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால் ; அல்லது

(ஆ) ஆறு மாதங்களுக்குக் குறையாத காலமொன்றுக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதானதும், ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்றதுமான தவறொன்றுக்கு அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால் ; அல்லது

(இ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ; அல்லது

(ஈ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் விடுவிக்கப்படாத கடனிறுக்கவகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப்பட்ட ஆளொருவராக இருந்தால்,

அத்தகைய ஆள், சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது பதவியில் தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

(6) (அ) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(ஆ) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவரது பதவிக்காலம் முடிவுறுமுன்னர், இறப்பின்மூலம் பதவிவிலகுதலின் மூலம் அல்லது வேறுவகையாகத் தமது பதவியை வறிதாக்குமிடத்து, அவரை அடுத்துறுபவர், அவருக்கு முன்னிருந்தவரினது பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(7) சபையானது, சபையின் செயலாளராகவிருப்பதற்கு ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(8) சபையின் தவிசாளர், சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் ஏதேனும் கூட்டத்துக்கு வருகை தராதிருப்பின், 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர், பிரதி ஆளுநர் ஆகிய இருவரும் வருகைதராதிருப்பின், அக்கூட்டத்தில் சமுகமளித்துள்ள சபையின் எவரேனும் உறுப்பினர், அக்கூட்டத்துக்கான தவிசாளராக ஏனைய உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(9) (அ) சபையின் உறுப்பினர்களுக்கிடையே ஏதேனும் அபிப்பிராய வேறுபாடு இருக்கும் பட்சத்தில், சமுகமளித்துள்ள உறுப்பினர்களினுள் பெரும்பான்மையோரின் முடிபு, பிணிப்பதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) சபையின் உறுப்பினர்களிடையே வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில், தவிசாளர் அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதல் வேண்டும்.

(10) சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

(11) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(12) பதினோராம் உட்பிரிவின் ஏற்பாடுக்கமைய, சபையானது, அதன் கூட்டங்களும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை ஆக்கலாம்.

நிதியத்தின் இலட்சியங்களும் குறிக்கோள்களும்.

4. நிதியத்தின் இலட்சியங்களும் குறிக்கோள்களும் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) ஆயுதந்தாங்கிய படைச்சேவை ஆளணியினருக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக நிதியுதவியை வழங்குவதற்கான திட்டங்களை வகுத்தமைத்தல் ;

(ஆ) சட்டத்தின் கீழ் தகவுடையோராகவுள்ள ஆயுதந் தாங்கிய படைச்சேவை ஆளணியினருக்கு வீடமைப்பு வசதிகளை பெறுவதற்கு உதவி வழங்குதல் ;

(இ) நிதி நிறுவனங்களிடமிருந்து ஆயுதந்தாங்கிய படைச் சேவை ஆளணியினரினால் கடன்கள் பெறப்படுவதற்கும், பெறப்பட்ட கடன்கள் மீளச் செலுத்தப்படுவதற்கும் அவர்களுக்கு உதவி வழங்குவதற்காக ஏற்பாடு செய்தல்;

(ஈ) போர்புரியும்போது அல்லது வேறுவகையாக, எவரேனும் ஆயுதந்தாங்கிய படைச்சேவை ஆளணியினர் இறக்கும் அல்லது நிரந்தரமாக இயலாமைக்குட்படும் அல்லது ஊறுக்குட்பட்டவராகும் பட்சத்தில், கடன்கள் மீளச் செலுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கானவொரு திட்டத்தை வகுத்தமைத்தல்.

5. (1) சபையானது, நிதியத்தின் பெயரில், நிதியத்தின் இலட்சியங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்கு அவசியமான, அல்லது அதற்குகந்தனவான, அல்லது அதன் இடைநேர் விளைவான எல்லாக் காரியங்களையும் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும். சபையின் தத்துவங்கள்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும் ;-

(அ) உள்நாட்டு மூலங்களிலிருந்தேனுஞ்சரி அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்தேனுஞ் சரி, நிதிகளைத் திரட்டுவதற்கும், காசாக அல்லது பொருளாக மானியக் கொடைகளையும், கொடைகளையும், நன்கொடைகளையும் பெறுவதற்கும் ;

(ஆ) இச்சட்டத்தின் மூலம், அல்லது ஏதேனும் கொள்வனவு, கொடை, மானியக்கொடை, இறுதிவிருப்பாவணக் கையுதிர்ப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது

வேறுவகையாக அதற்குரியதாக வரக்கூடியதும், அசைவுள்ளதும் அல்லது அசைவற்றதுமான ஏதேனும் ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கும், கொள்வதற்கும் அல்லது வைத்திருப்பதற்கும், அத்துடன் நிதியமானது எந்த ஆதனத்துக்கு உரித்தாக வரக்கூடுமோ அந்த ஏதேனும் ஆதனத்தை விற்பனை செய்வதற்கும், ஈடு வைப்பதற்கும் குத்தகை கொடுப்பதற்கும், அளிப்பதற்கும், உரிமை மாற்றுவதற்கும், இறுதிவிருப்பாவணத்தின்மூலம் உடைமை மாற்றுவதற்கும், சாட்டுதல் செய்வதற்கும், கொடுத்துமாற்றுவதற்கும் அல்லது வேறு வகையாகக் கையுதிர்ப்பதற்கும் ;

(இ) (45 ஆம் அத்தியாயமான) லொத்தர்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, நிதியத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக நிதிகளைத் திரட்டுவதற்கென ஏதேனும் லொத்தரை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நடாத்துவதற்கும் ;

(ஈ) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அலுவலர்களையும், ஊழியர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், அவர்களுக்கு ஊதியமளிப்பதற்கும், அத்தகைய அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமனம், பதவியுயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன தொடர்பான விதிகளை ஆக்குவதற்கும், அவர்களுக்கு லீவும் ஏனைய நன்மைகளும் வழங்குவதற்கும் ;

(உ) நிதியத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், ஆற்றுவதற்கும், அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் ஒன்றில் நேரடியாகவோ அல்லது சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள், ஊழியர்கள், சேவையாளர்கள் மற்றும் முகவர்கள் மூலமாகவோ செய்துகொள்வதற்கும் புரிவதற்கும் ;

(ஊ) பணத்தை முதலீடு செய்வதற்காகச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றவாறான அத்தகைய எவையேனும் முதலீடுகளில் சபையின் தற்றுணிபில் நிதியத்துக்குச் சொந்தமான பணத்தை முதலீடு செய்வதற்கும், சபையின் தற்றுணிபில் அத்தகைய முதலீடுகளை மீட்டுப்பெறுவதற்கும், முதலீடு செய்தற்கும், வேறுபடுத்துவதற்கும், அத்தகைய முதலீடுகளிலிருந்து எழுகின்ற அல்லது திரளுகின்ற ஏதேனும் வருமானத்தைச் சேகரிப்பதற்கும் ;

(எ) நிதியத்தின் நோக்கங்களுக்காக, வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும், மூடிவிடுவதற்கும், நிதியத்தின் ஆதனத்தை பிணைப்பொறுப்பாக வைத்து அல்லது அத்தகைய பிணைப்பொறுப்பில்லாமல் பணத்தைக் கடனாகப் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் ; அத்துடன்

(ஏ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதன் இடைநேர்விளைவான அல்லது அதற்குகந்தனவான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்வதற்கும்.

பிரதான கணக்கீட்டலுவலர்கள் நிதியத்தின் நிருவாகத்துக்கும் முகாமைத்துவத்துக்கும் பொறுப்பாக விருத்தல்

**6**. சபையினால் நியமிக்கப்பட்ட நிதியத்தின் பிரதான கணக்கீட்டலுவலரொருவர் இருத்தல் வேண்டும் ; அவர் சபையின் அங்கீகாரத்துடன், 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்தின் நிருவாகத்துக்காகவும் முகாமைக்காகவும், குறிப்பாக 7 ஆம், 8 ஆம் பிரிவுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட கருமங்களுக்காகவும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

நிதியத்துக்கான கொடுப்பனவுகள்.

**7**. பின்வருவன நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) உள்நாட்டில் அல்லது வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட எவையேனும் மானியக் கொடைகள், கொடைகள் நன்கொடைகள் அல்லது திரட்டப்பட்ட அல்லது பெறப்பட்ட எவையேனும் நிதிகள் ;

(ஆ) இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர், நிதியத்துக்காக உள்நாட்டில் அல்லது வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட எவையேனும் நிதிகள், மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் ;

(இ) நிதியத்தின் இலட்சியங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காகக் காலத்துக்குக் காலம் அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் மானியக் கொடை ;

(ஈ) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சனாதிபதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்தில் இருந்து காலத்துக்குக்காலம் கைமாற்றப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் ;

(உ) 1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசியப் பாதுகாப்பு நிதியத்திலிருந்து கைமாற்றப்பட்ட ஏதேனும் பணத்தொகை ;

(ஊ) நிதியத்துக்கு வருமதியாகவுள்ள முதலீடுகளிலிருந்தான அல்லது வேறு பெறுகைகளிலிருந்தான வருமானம்.

நிதியத்திலிருந்தான கொடுப்பனவுகள்.

8. பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :–

(அ) நிதியத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான எல்லா செலவுகள் ;

(ஆ) ஆயுதந்தாங்கிய படைச்சேவை ஆளணியினருக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீது திரண்ட வட்டி ;

(இ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமாகவுள்ளனவெனச் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறெல்லாக் கொடுப்பனவுகளும்.

9. "அப்பி வெனுவென் அப்பி நிதியம்" என்ற பெயரில் மத்திய வங்கியில் நிதியத்தினால் கணக்கொன்று பேணப்படுதல் வேண்டுமென்பதுடன் 7 ஆம் பிரிவின்கீழ் நிதியத்தினுட் செலுத்தப்படும் பணங்கள் சொல்லப்பட்ட கணக்குக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

மத்திய வங்கியில் பேணப்பட வேண்டிய கணக்கு.

10. நிதியமானது, நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி அனுமதிக்கப்படுகின்றவாறான அத்தகைய அளவுக்கு நிதியத்தின் வருமானம் அல்லது இலாபங்கள் மீதான ஏதேனும் வரிக்கொடுப்பனவிலிருந்து விலக்களிப்படுதல் வேண்டும்.

வரிகளிலிருந்து நிதியத்தக்கு விலக்களித்தல்.

11. (1) சபையானது, நிதியத்தின் வருமானமும், செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும், அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றி முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்

கணக்குகளும் கணக்காய்வும்.

(2) சபையானது, அதன் புத்தகங்கள் அதே ஆண்டின் திசெம்பர் முப்பத்தோராம் நாளன்றுள்ளவாறாகச் சமன் செய்யப்படுவதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், அடுத்துவரும் ஆண்டில் மார்ச் முப்பத்தோராம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலும், சபையின் அங்கீகாரத்துக்காக அவற்றை அதற்குச் சமர்ப்பித்தலும் வேண்டும் ;—

(அ) அத்தகைய ஆண்டிற்காக நிதியத்தின் வருமானமும் செலவினமும் பற்றிய எல்லா விபரங்களையும் கொண்டுள்ள வருமான செலவினக் கணக்கொன்று ;

(ஆ) திசெம்பர் முப்பத்தோராம் நாளன்று உள்ளவாறாக நிதியத்தினால் வைத்திருக்கப்பட்ட, நிதியத்தின் எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய சுருக்கத்தைக் கொண்டுள்ள ஐந்தொகை ;

(இ) அவ்வாண்டில் நிதியத்தினுட் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் காட்டுகின்ற காசோட்டம் பற்றிய கூற்றொன்று.

(3) நிதியத்தின் பிரதான நிதியலுவலர், அவரது கையொப்பத்தின் கீழ், (2) ஆம் உட்பிரிவிற்கிணங்கத் தயாரிக்கப்பட்ட வருமான, செலவினக் கணக்கையும், ஐந்தொகையையும், காசோட்டம் பற்றிய கூற்றையும், சபையின் அங்கீகாரத்துக்காக அதற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) சபையானது, சபையின் தீர்மானத்தின்மூலம், (3) ஆம் உட்பிரிவின்கீழ் பிரதான கணக்கீட்டலுவலரினால் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமான, செலவினக் கணக்கையும், ஐந்தொகையையும், காசோட்டம் பற்றிய கூற்றையும் அங்கீகரித்தல் வேண்டும்.

(5) சபையானது, சட்டத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு எடுக்கப்பட்ட நடபடிகள் பற்றிய விபரமான அறிக்கையொன்றைக் கொண்டிருக்கவேண்டியதும், நிதியத்தின் அலுவல்களினது நிருவாகம் பற்றிப் பிரதான கணக்கீட்டலுவலரினதுமான அறிக்கை, பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து அமைச்சருக்கு அனுப்பப்படுவதனைச் செய்தவித்தல் வேண்டும் :—

(i) இயைபான ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை ; அத்துடன்

(ii) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்கள்.

(6) அமைச்சரானவர், இப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட அறிக்கையினதும் ஆவணங்களினதும் பிரதிகள், பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(7) கணக்காய்வாளர் தலைமையதிபதி, அரசியலமைப்பினது 154 ஆம் உறுப்புரைக்கிணங்க நிதியத்தின் கணக்குகளை ஒவ்வோராண்டும் கணக்காய்வு செய்தல் வேண்டும்.

நிதியத்தின் இலச்சினை.

12. (1) நிதியத்தின் இலச்சினையானது :—

(அ) முகாமைச் சபையின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ; அத்துடன்

(இ) சபையின் அனுமதியுடனும், சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலும் தவிர, ஏதேனும் ஆவணத்தில் பொறிக்கப்படலாகாது : அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அந்த ஆவணங்களில் கையொப்பமிடுதல் வேண்டும். எவ்வாறாயினும், இலச்சினையைப் பொறிப்பதற்கான தத்துவம், சபையின் தீர்மானமொன்றின் மூலம் நிதியத்தின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கப்படலாம் :

(2) சபையானது அதன் இலச்சினை பொறிக்கப்படும் எல்லா ஆவணங்களினதும் இடாப்பொன்றையும் பேணச் செய்வித்தல் வேண்டும்.

விதிகள்.

13 . (1) இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறான ஏதேனும் கருமம் தொடர்பில் சபையானது விதிகளை ஆக்கலாம்.

(2) சபையினால் ஆக்கப்பட்ட விதியெதுவும், அது அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தாலொழிய, பயனுடையதாதலாகாது.

ஒழுங்கு விதிகள்.

14. (1) விதித்துரைக்கப்படவேண்டுமெனச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அவை தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட கருமங்களுக்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர், பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) நிதியத்திலுள்ள பணங்களைப் பகிர்ந்தளிக்கும் முறையும் விதமும் :

(ஆ) கடனையும் அதன் மீது திரண்ட வட்டியையும் கொடுப்பனவு செய்வதற்காக நீடித்த காலப்பகுதியொன்றை அளிப்பதில் கவனத்துட்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலைகள் அல்லது காரணங்கள் :

(இ) கடன் தவணைப்பணங்களைக் கொடுப்பனவு செய்யும் முறையும் விதமும் ;

(ஈ) கடனொன்றுக்கான தகவுடைமையை மதிப்பீடு செய்வதில் கவனத்துட்கொள்ளப்பட வேண்டிய கட்டளைக் கற்கள் ;

(உ) லொத்தர்கள் நடாத்தப்படும் முறையும் மாதிரியும் ;

(ஊ) கடனொன்றுக்கான விண்ணப்பத்தைச் செய்யும் முறையும் மாதிரியும் ; அத்துடன்

(எ) நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட கடன்கள் எம்முறையில் அறவிடப்பட வேண்டுமோ அம்முறை.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக, அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பட்ட தேதிபற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

கடனொன்றுக்கான விண்ணப்பம்.

**15.** இச்சட்டத்தின் கீழ் வீடமைப்புக் கடனொன்றுக்குத் தகவுடையவரான எவரேனும் ஆயுதந்தாங்கிய படைச்சேவை ஆளணியினர், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சபைக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

16. அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன்மேல் சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அத்தகைய விண்ணப்பத்தைச் சீர்தூக்கிப் பார்த்தலும், அத்தகைய முடிபுக்கான காரணங்களுடன் அத்தகைய விண்ணப்பக்காரரின் தகவுடைமை தொடர்பாகச் சபைக்குத் தெரிவித்தலும் வேண்டும். சபையானது விண்ணப்பகாரரின் தெரிவுபற்றித் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்வதன் மேல், அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதிலிருந்து நான்கு வாரங்களினுள் சபையின்முடிபு செய்யப்படுதல் வேண்டும்.

அத்தகைய விண்ணப்பத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும் முறை.

17. (1) சபையின் முடிபினால் இன்னலுறும் எவரேனும் விண்ணப்பகாரர், அத்தகைய முடிபை வேறுபடுத்தும்படி அல்லது அத்தகைய முடிபைத் திருத்தும்படி அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

அமைச்சருக்கான மேன்முறையீடு.

(2) அத்தகைய மேன்முறையீட்டைப் பெற்றதன் மேல், அமைச்சரானவர், விண்ணப்பகாரருக்கும் சபையின் பிரதிநிதியொருவருக்கும் தம்பக்கவழக்கை உரைப்பதற்கான சந்தர்ப்பமளித்த பின்னர் –

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து சபையின் முடிபை எதிர்மாறாக்குதல் வேண்டும் ;

(ஆ) மேலதிகத் தகவல் கொடுத்துதவும்படி அல்லது சான்று எடுக்கப்படும்படி கோருதல் வேண்டும் ;

(இ) சபையின் முடிபை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

18. அமைச்சரின் முடிபு, சபைக்கும் விண்ணப்பகாரருக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும் ; அம்முடிபுக்கு இணங்கியொழுதுல் வேண்டும்.

அமைச்சரின் முடிபு விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படுதல்.

நிதியத்தின் உறுப்பினர், அல்லது அலுவலர் முதலியவர்களுக் கெதிராக அல்லது அவர்களின் இதனத்துக் கெதிராக, எழுத்தாணை எதுவும் வழங் கப்படுதலாகாது.

**19.** நிதியத்துக்கெதிராகக் கொணரப்படும் ஏதேனும் வழக்கில், சபையின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது எவரேனும் அலுவலருக்கெதிராக அல்லது சேவையாளருக்கெதிராக அல்லது அவர்களின் ஆதனத்துக்கெதிராக, எழுத்தாணை எதுவும் வழங் கப்படுதலாகாது.

ஏதேனும் துடர்ச்சியிலான செலவுகளை அறவிடுதல்.

**20.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் சபையினால் அல்லது சபைக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில், வழக்கில் அல்லது குற்றவழக்கில் நிதியத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, நிதியத்தின் நிதிகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் வழக்கி அல்லது குற்றவழக்கில் சபையினால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுத்தொகை, நிதியத்தின் சேகரிப்புக் கணக்குக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் சபையின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக, அல்லது எவரேனும் அலுவலர், ஊழியர், சேவையாளர் அல்லது முகவர் என்போருக்கெதிராக, சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது எவரேனுமாளினால் செய்யப்படுகின்ற அல்லது செய்யப்படுகின்றதாகக் கொள்ளப்படு கின்ற ஏதேனும் செயல் தொடர்பில் கொணரப்படும் ஏதேனும் துடர்ச்சியில், வழக்கில் அல்லது குற்றவழக்கில், குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய எவரேனும் ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, நிதியத்தினால் அவருக்கு மீளளிக்கப் படுதல் வேண்டும்.

நிதியத்தின் அலுவலர்களும், சேவையாளர் களும், தண்ட னைச் சட்டக் கோவையின்கீழ் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப் படுதல் வேண்டும்.

**21.** நிதியத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக் குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்க ளாகக் கருதப்படுதல் வேண்டும்.

**22.** நிதியமானது, (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருததுக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

நிதியானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன் றாகக் கருதப் படுதல் வேண்டும்.

**23.** சட்டத்தில், "ஆயுதந்தாங்கிய படைச்சேவை ஆளணியினர்" என்பது, (357 ஆம் அத்தியாயமான) இலங்கைத் தரைப்படையின், (358 ஆம் அத்தியாயமான) இலங்கைக் கடற்படையின், அத்துடன் (359 ஆம் அத்தியாயமான) இலங்கை வான்படையின் படைச்சேவை ஆளணியினர் மற்றும் (53 ஆம் அத்தியாயமான) இலங்கைப் பொலிசுப் படையின் உறுப்பினரொருவர் என்று பொருளாகும்.

பொருள் கோடல்.

**24.** இச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்